## தஞ்சையில் ஆகஸ்ட் 3-ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட - கழகத்தினர் அணி, அணியாய்த் திரள்வீர்!

### மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அழைப்பு!





புதுக்கோட்டை, ஆக.2-

தமிழ்நாடு விவசாயிகளின் நலன்களை புறக்கணித்து, மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கோட்டை விட்ட த.வெ.க அரசை கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ள மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டத்தில் கழக தோழர்கள் திரளாக கலந்துக் கொள்ள புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.


இதுகுறித்து அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க் கடன் தள்ளுபடி மோசடியை கண் டித்தும் மேகதாது பிரச்சி னையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட் டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது, காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது, கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவ விட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.சு. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026 திங்கட்கிழமை) காலை: 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வரவேற்புரையாற்றுகிறார். மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம். ஹெச்.ஜவாகிருல்லா. ம.ஜ.க மாநிலத் தலைவர் மாநில பொது செயலாளர் மு.தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் நெல்லை முபாரக், தி.க. இரா.ஜெயக்குமார், தே.மு.தி.க மாவட்டச் செயலாளர் பி.சிவநேசன், மக்கள் நீதி மையம் மாவட்ட அமைப் பாளர் தர்ம.சரவணன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஏ.ஆரோக்கியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக சட்டதிட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கரன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.பி, இராமலிங்கம், மாநில விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முரசொலி, கே.என்.அருண் நேரு, சுவிஞர் சல்மா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜித்து, வி.என்.மணி, உள்ளிட்ட டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர். இந்த

ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு . தெற்கு மாவட்டத்தைக் சேர்ந்த விவசாய பெருங்குடி மக்கள். கழக நிர்வாகிகள், விவசாய சங்க மாவட்ட பிரதிநிதிகள் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் வட்ட கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் தவறாது கலந்து கொண்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது !





# காவிரி நதி நீர் உரிமையை நிலைநாட்ட தஞ்சையில் ஆர்ப்பாட்டம்!

### திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஆக. 2-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் உயிர்நாடியான காவிரி நதிநீரை உரிய முறையில் பெற்றுத் தர வலியுறுத்தியும், மேகதாது அணை விவகாரத்தில் ஒன்றிய,மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், பயிர்க் கடன் தள்ளுபடியில் நிலவும் குளறுபடிகளை மாநில அரசு உடனடியாக களைய வலியுறுத்தியும், திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர், முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, த.வெ.க அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டனப் போராட்டம் நாளை (ஆகஸ்ட் 3) தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிறது.

இப்போராட்டத்திற்கு கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்கிறார்.

இது வெறும் அரசியல் நிகழ்வு மட்டுமல்ல; தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், மக்களின் குடிநீர் உரிமையையும் பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க உரிமைப் போராட்டமாகும்.

இந்த ஆர்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், வட்டம், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு, இந்த ஜனநாயக உரிமைப் போராட்டத்தை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தஞ்சையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# அரியலூர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



அரியலூர்,ஆக, 2-

தி.மு.க. சார்பில் தஞ்சாவூரில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தியும் காவிரி உரிமையை நிலை நாட்டுவதில் த.வெ.க அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை 3ஆம் தேதி நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொள்வீர் என்று அரியலூர் மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. சார்பில் தமிழ்நாடு விவசாய பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் தவெக அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து நாளை 03.08.2026(திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் இந்த ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களை சேர்ந்த தோழர்களும் பொதுமக்கள் அனைவரும் போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வீர்

இவ்வாறு மாவட்ட செயலாளர் சா.சி. சிவசங்கர் எம்.எல்.ஏ. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தஞ்சாவூரில் விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வோம்!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



மயிலாடுதுறை. ஆக.2–

விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தஞ்சாவூரில் நாளை ஆகஸ்ட் 3 – திங்கள்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது இதில் மயிலாடுதுறை மாவட்ட கழகத்தினர், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும் என மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

சோபா மாடல் த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் படும் துன்பமே அதற்கு சாட்சி என நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர். தேர்தலுக்கு முன்பு 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும் என கூறிவிட்டு ஆட்சிக்கு வந்த பின் ரூ 50 ஆயிரம் வரை மட்டுமே கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டதை ஏற்காத விவசாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால், 75 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. திமுக ஆட்சியில் இருந்தபோது வாலைசுருட்டி கொண்டிருந்த கர்நாடகா அரசு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டு வதில் தீவிரம் காட்டி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதலமைச்சரே தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக வரும் ஆகஸ்ட் 3ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடக செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார். த.வெ.க. சோபா மாடல் அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை, எதிலும் வெளிப்படைத் தன்மை இல்லை. கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்தது. இந்தாண்டு மேட்டூர் அணை திறக்காததால் 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். திமுக.ஆட்சியில் இருந்தாலும் இல்லை என்றாலும் எப்பொழுதும் விவசாயிகளின் நலனில் தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் அலட்சியத்தால் குறுவை பொய்த்து போனதால் காவிரி டெல்டாவில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாய். வழங்க வேண்டும், காப்பீட்டுத் திட்டத்துக்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க உதவி.சம்பா சாகுபடிக்கான மறுமுதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி என இடுபொருட்கள் மானியமாக வழங்குதல் உள்ளிட்ட கோரிகளை வலியுறுத்தி நாளை 3ஆம் தேதி காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில் கழகத்தின் எதிர்காலம், கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறத. டெல்டா மாவட்டங்களின் வாழ்வாதாரத்திற்காக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், கழகத்தினர், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றி அடைய செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

## இழக்கப்போகும் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க ஆகஸ்ட் 3

# தஞ்சை ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

### மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!



திருவாரூர்,ஆக-. 2-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களாலும், திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களாலும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட வேளாண் திட்டங்களினால் செழித்த விவசாயம் , சினிமா மோக அரசியல்வாதிகளின் ஆட்சியில் இழக்கப்போகும் நிலையை கருதி, கழகம் அறிவித்திருக்கும் ஆகஸ்ட் 3 தஞ்சை ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தில் இருந்து பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறி இருப்பதாவது.

தமிழ்நாடு என்பது, அதிலும் டெல்டா பகுதி என்பது முற்றிலும் விவசாயம் ஒன்றை மட்டுமே சார்ந்திருக்கும் பகுதி. இங்குள்ள மக்கள் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த வழக்கையை மட்டுமே நம்பி வாழ்க்கையை நடத்துகின்றனர். விவசாயத்தை ஒரு தொழிலாக பார்க்காத நம் பகுதி மக்கள் அதனை ஒரு கவுரவமாகவே கருதி செய்துவருகின்றனர்.

இதனை நன்றாக உணர்ந்திருந்ததால்தான் விவசாய குடும்பதில் இருந்து வந்த மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயத்திற்கு என முக்கிய திட்டங்களை செயல்படுத்தி, அதனை கழக ஆட்சியில் நிறைவேற்றியதோடு, ஆட்சிப்பொறுப்பில் இல்லாத போதும் அந்த திட்டங்களை மக்களுக்கு கிடைக்க பாடுபட்டார். அந்த வழி வந்து தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி தந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியில் விவசாயம் செழிக்க வேளாண்மைக்கு என தனி பட்ஜெட்,விவசாய கடன் தள்ளுபடி, மேட்டூர் அணை காலத்தோடு திறப்பு, தூர்வாரும் பணிகள், நேரடி நெல் கொள்முதல் நிலையம் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட விவசாயத்தை தமிழ் நாட்டிற்கு அடையாளப்படுத்தினார்.

அதனால்தான் வரலாறு காணாத அளவுக்கு 47 ஆண்டுகள் இல்லாத வகையில், நெல் உற்பத்தியில் கடந்த 2016-21 ஆட்சியை விட 119.96 லட்சம் மெட்ரிக் டன் நெல்உற்பதி செய்து சாதனை படைத்தது. ஆனால் எந்த ஒரு அடிப்படை விவசாயத்தையும் அறியாதவர்கள் , சினிமா மோகத்தை மக்களுக்கு புகுத்தி , பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சிக்கு வந்ததின விளைவாக மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களாலும், திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களாலும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட வேளாண் திட்டங்களினால் செழித்த விவசாயத்தை நாம் இழக்கும் நிலைக்கு திட்டமிட்டே இந்த அரசு தள்ளுகிறது.

இதனை தடுத்து தமிழ்நாட்டை உலக அரங்கில் தலைநிமிர்த்திய திராவிட நாயகர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கும் தமிழ்நாட்டின் எதிர்காலம், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆகஸ்ட் 3 (03.08.2026 திங்கள்), தஞ்சாவூர் பனகல் சாலையில் நடைபெற இருக்கும் தஞ்சை விவசாய ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தில்இருந்து பெருந்திரளாக பங்கேற்று, இன்றய ஆட்சியாளர்களின் கைகளில் சிக்கித்தவிக்கும் நமது கவுரவமாம் விவசாயத்தை மீட்டெடுக்கும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.





கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, அதனை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி, அந்த மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வுகான அறிவுறுத்தினார். இதில் மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், ர.சரஸ்வதி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## காவிரி உரிமைக்காக ஆக.3ல் – தி.மு.க. நடத்தும் ஆர்ப்பாட்டத்தில்

# மனிதநேய ஜனநாயகக் கட்சி பங்கேற்கும்!

### ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை, ஆக. 2–

மனித நேய ஜனநாயக கட்சித் தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

காவிரியின் குறுக்கே அணை கட்ட முயற்சிக் கும் கர்நாடக அரசின் நடவடிக்கைகளை கண்டித்தும், காவிரி உரிமைகளை பாதுகாக்கும் நோக்கோடும், விவசாயிகளுடைய நலனை முன்னிறு த்தியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்வரும் ஆகஸ்ட் 3 அன்று தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒத்த கருத்துடைய கட்சிகள் இதில் பங்கேற்க வேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உணர்வுகளை பிரதிபலிக்கும் நோக்கோடு நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில், மனிதநேய ஜனநாயக கட்சி பங்கேற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.